வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 00738 /ஆ4 /2022, நாள் : 17.03.2022

பொருள்: தேர்வுகள் – மே 2022 மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் – பள்ளி மாணாக்கரின் பெயர்ப்பட்டியலை பதிவிறக்கம் செய்தல் மற்றும் திருத்தங்களை மேற்கொள்ளுதல் – அறிவுரை வழங்குதல் வழங்குதல் – சார்பு.

பார்வை : சென்னை- 6. அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.019373/ /எப்1/2021, நாள்: 19.01.2022, 02.02.2022, மற்றும் 16.03.2022.

#######

பார்வையில் காணும் கடிதங்களின்படி மே 2022, மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுக்கான பள்ளி மாணாக்கரின் பெயர்ப்பட்டியல் தயாரிக்கும் பொருட்டு, அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் 04.01.20022 முதல் 05.02.2022 வரையிலான நாட்களில் தங்களது பள்ளியில் +1 பயிலும் அனைத்து மாணாக்கர்களது விவரங்களையும் இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்து, தேர்வுக் கட்டணத்தினையும் இணையதளம் வாயிலாக செலுத்த வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.

தற்போது அனைத்து மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும், மே 2022 மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்வினை G.R Number (Generated Register Number) அடங்கிய பெயர்ப்பட்டியலை பதிவிறக்கம் செய்து, பின்வரும் அறிவுரைகளைப் பின்பற்றி திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

1. அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களும் 18.03.2022 பிற்பகல் முதல் 23.03.2022 வரையிலான நாட்களில் www.dge.tn.gov.in என்ற இணையதள முகவரிக்கு சென்று, தங்கள் பள்ளிக்கு அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் வழங்கப்பட்டுள்ள USSER ID மற்றும் Password–ஐ பயன்படுத்தி மே 2022, மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்விற்கான தங்கள் பள்ளி மாணாக்கரின் G.R Number (Generated Register Number) அடங்கிய பெயர்ப்பட்டியலை பதிவிறக்கம் செய்து,

(PTO)